**முதல் கூடுதல் சார்பு நீதிமன்றம், ஈரோடு, ஈரோடு மாவட்டம்.**

2025ம் ஆண்டு ஜுன் மாதம் 26-ம் தேதி பிரதிவாதி தரப்பு சாட்சி பி.வா.சா.1-ன் வாக்குமூலம் 1989ம்ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.ஜி.அசோக் பிரசாத், பி.ஏ., பி.எல்., எம்.எஸ்.இ.என்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**(வாதி ஆஜர் இல்லை. 2ம் பிரதிவாதி ஆஜர். 3 முதல் 20 பிரதிவாதிகள் ஆஜர் இல்லை. வாதி மற்றும் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர்கள் ஆஜர்)**

அ.வ.எண்.932/2015

பி.வா.சா.1- சிவசண்முகம்

**17 முதல் 19 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. எனது அப்பா 1ம் பிரதிவாதி வாரணாசிகவுண்டரின் 2 முதல் 4 பிரதிவாதிகள் ஆவார்கள். 1 முதல் 4 பிரதிவாதிகள் கூட்டுக்குடும்பமாக இருந்தோன். என்னுடைய அப்பா குடும்பத்தலைவராக கர்த்தாவாக இருந்தார். என் அப்பா இந்த வழக்கு விசாரணையில் 15.11.2021ல் காலமாகும் நாள் வரை கூட்டுக்குடும்பமாக இருந்து வந்தோம். வாதிக்கு 2015ல் இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு அவருக்கு அருகதை இல்லை என்று சொன்னால் சரிதான்.

2. 17 முதல் 19 பிரதிவாதிகள் என் அப்பாவிடம் ஒரு ஏக்கரை 2 கிரயம் பெற்றார்கள் அது முறையே பி.வா.சா.2 மற்றும் வா.சா.12 என்றால் சரிதான். கிரயம் பெற்ற பிறகு பிரதிவாதிகள் 17 முதல் 19 ஆகியோர்களின் சுவாதீனத்தில் இருந்தது என்றால் சரிதான். என் அப்பாவிற்கு 5 ஏக்கர் 44-1/2 செண்ட்டில் என் தந்தையின் சகோதரிகள் ராமாயம்மாள், தங்கம்மாள் மற்றும் லட்சுமி ஆகியோர் 07.11.2007 விடுதலை பத்திரம் எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான். அந்த விடுதலை பத்திரம் வா.சா.4 ஆகும்.

3. இந்த பிரதிவாதிகளுக்கு விற்பனை செய்த 1 ஏக்கர் கிரயம் செய்த சொத்து வா.சா.4 ஆவணத்தில் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.1 ஆவணத்தில் கண்டுள்ள 35 செண்ட் கண்டு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். 65 செண்ட் என் அப்பாவிற்கு தனிப்பட்ட முறையில் எழுதப்பட்டதால் பி.வா.சா.1 ஆவணத்தில்

குறிப்பிடவில்லை என்றால் சரிதான். 65 செண்ட் தனிப்பட்டு இருப்பதால் தான் வா.சா.4ல் அதையும் சேர்த்து எழுதிக்கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

4. 17 முதல் 19 பிரதிவாதிகள் தொடர்ந்து சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் அது வாதிக்கும் தெரியும்.

**5 முதல் 9 மற்றும் 14, 15 பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிகணங்க குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**